

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குடும்பத்துடன் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.

### வள்ளுவரின் அறநெறியில்

# நம்வாழ்வு அமையட்டும்!

## திருவள்ளுவர் தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜன. 19-**

**திருவள்ளுவர் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

வள்ளுவரின் அறநெறியில் நம் வாழ்வு அமையட்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளுவர் தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈராயிரம் ஆண்டுகள் கடந்து இன்றளவும் நிலைத்து நிற்கும் இலக்கியமாய், உலக மாந்தர்க்கெல்லாம் பொதுவான உயரிய நற்கருத்துகள் கொண்ட திருக்குறளைப் படைத்திட்ட வள்ளுவப் பெருந்தகையைப் போற்றுவோம்!

அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலையும் ஈரடியில் தந்து மூவாத் தமிழுக்குப் பெருமை சேர்த்த அய்யன் வள்ளுவர் சொன்ன அறநெறிவழியில் நம் வாழ்வு அமையட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### சென்னை – நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் பொங்கல் விழா!

# வீடற்றோருக்கு புதிய வீடுகளை வழங்கிட ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜன. 19-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-**

**அன்பால் நிறைந்திட வேண்டும் அகிலம்!**

உறவுகளைப் பிரிந்து, ஆதரவிழந்தோருக்கு அடைக்கலமாய், சென்னை மூன்றாவது கடற்கரைச் சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் பொங்கல் விழாவைக் கொண்டாடினேன்!

செல்லும் வழியில், நேதாஜி சாலை நாராயணப்பதெருவில் சாலையோரங்களில் வசிக்கும் வீடற்றோரைச் சந்தித்து, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் அவர்களுக்குப் புதிய வீடுகளை வழங்கிட ஆணையிட்டுள்ளதைப் பகிர்ந்துகொண்டேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம்!

## திருச்சி - சூரியூரில் ஜல்லிக்கட்டு மைதானத்தை திறந்து வைத்து – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**திருச்சி, ஜன. 19-**

**“திராவிட மாடல் ஆட்சியில் திருச்சியின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்துள்ளோம்” என்று திருச்சி சூரியூரில் ஜல்லிக்கட்டு மைதானத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

பெருமை வாய்ந்த இந்த சூரியூர் மண்ணில் நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில், கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கத்தில் ஜல்லிக்கட்டு அரங்கத்தை உங்களுடன் சேர்ந்து திறந்து வைப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி, பெருமை.

**தமிழர் திருநாள்**

முதலில், வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய தமிழர் திருநாள் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே, உங்கள் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், பொங்கல் திருவிழாவை அனைவரும் உங்கள் குடும்பத்தார்களோடு, உற்றார் உறவினர்களோடு, நண்பர்களோடு மகிழ்ச்சி யாகக் கொண்டாடி வருகிறீர்கள். அப்படி என்னுடைய குடும்பத்தினரோடு, உற்றார் உறவினர்களோடு கொண்டாடுவதற்காக, உங்களைத் தேடி உங்களோடு கொண்டாடுவதற்காக, இந்தப் பொங்கல் திருவிழாவிற்கு வருகை தந்திருக்கின்றேன். அதுவும் நம்முடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்துவதற்கான அரங்கத்தை, இந்தப் பொங்கல் நாளில் திறந்துவைத்திருக்கிறோம்.

**திருச்சிக்கு அடையாளம்**

சூரியூர் என்றாலே ஜல்லிக்கட்டுக்குப் புகழ்பெற்ற மண் என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கே தெரியும். திருச்சிக்கு எப்படி மலைக்கோட்டை ஓர் அடையாளமோ, திருச்சிக்கு எப்படி காவிரி ஆறு ஓர் அடையாளமோ, அதே மாதிரி, சூரியூர் ஜல்லிக்கட்டும் திருச்சிக்கு ஓர் அடையாளமாக இருக்கிறது.

இந்த சிறப்பான ஜல்லிக்கட்டு அரங்கத்தைப் பார்க்கும் போது, சூரியூர் மற்றும் சுற்றுவட்டார மக்கள் உங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கின்றதோ, அதே



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 15.1.2026 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூரியூரில் 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் ஜல்லிக்கட்டு மைதானத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, ப.அப்துல் சமது, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், தமிழ்நாடு ஒலிம்பிக் பதக்க இலக்குத் திட்ட தலைவர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் உள்பட ஜல்லிக்கட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அளவு பெருமையை நானும் அடைகின்றேன். இந்த ஜல்லிக்கட்டு, முதலில் ஊர் தெருக்களில் நடைபெற்றுவந்தது. அதற்குப் பிறகு, ஊர் மந்தையில் நடைபெற்றது. அதன்பிறகு, ஊர் குளக்கரையில் வாடிவாசல் அமைத்து நடத்தப்பட்டது.

இப்படி படிப்படியாக வளர்ந்து, இந்த சூரியூர் ஜல்லிக்கட்டு, இந்த ஆண்டு நம் ஆட்சியில் கட்டப்பட்டுள்ள இந்த நிரந்தர அரங்கத்தில் நாளை நடக்க இருக்கின்றது என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. இது உங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. உங்கள் கோரிக்கையை உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் அவர்களிடம் நீங்கள் தெரிவித்தீர்கள். அவர் என்னிடத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் தெரிவிக்கவே, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒப்புக்கொண்டார்.

**சிறு விளையாட்டு அரங்கம்**

இன்றைக்கு, தமிழ்நாட்டில் இருக்கின்ற சட்டமன்ற தொகுதிகளில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், முதலமைச்சர் அவர்கள் சிறு விளையாட்டு அரங்கம் கட்டி வருகின்றார்கள். ‘முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்’ பலவற்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. பலவற்றை நானே திறந்து வைத்தேன். எல்லா ஸ்டேடியத்தையும்விட, முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்த, நான் திறந்து வைத்த எல்லா ஸ்டேடியங்களையும்விட இந்த ஸ்டேடியம் மிகவும் அழகாக, நம்முடைய தமிழர் பண்பாட்டை எடுத்துக்காட்டும் வகையில், பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

**3 கோடி ரூபாய் ஒதுக்கீடு**

இதில் எனக்கு என்ன கூடுதல் பெருமை என்றால், என்னுடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்த ஜல்லிக்கட்டு மைதானத்தை அமைத்திருக்கின்றோம். கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம்தான், இந்த ஜல்லிக்கட்டு மைதானப் பணிகளுக்கு நானே இங்கு வந்து அடிக்கல் நாட்டினேன். இந்தப் பணிகளை நான்தான் தொடங்கி வைத்தேன். பத்தே மாதங்களில் அனைத்து பணிகளும்நடந்து முடிந்து, இன்றைக்கு இந்த மைதானம் ஜல்லிக்கட்டு போட்டிக்குத் தயாராகியுள்ளது.

எனவே, இந்த மைதானத்தைக் கிராம மக்கள் உங்களிடத்தில் நான் ஒப்படைக்கின்றேன். நம்முடைய அரசு, எந்த அளவிற்கு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் தான், சூரியூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மைதானம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**ஒலிம்பிக் ஸ்டேடியம்**

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த சூரியூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களும் எந்த அளவிற்கு வளர்ச்சி யடைந்துள்ளன என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இங்கு வந்திருக்கக்கூடிய கிராம மக்கள் உங்களுக்கே தெரியும். இங்கே பக்கத்தில் தான், நம்முடைய விளை யாட்டுத் துறையின் சார்பில் ரூ.150 கோடி மதிப்பில் பிரம்மாண்டமான ஒலிம்பிக் ஸ்டேடியம் கட்டப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த ரிங் ரோடு பணிகளை நாம் முடித்துக் காட்டியிருக்கின்றோம். அதே போல, அமைச்சர் அண்ணன் நேரு அவர்கள் கட்டியிருக்கக்கூடிய பஞ்சப்பூர் பஸ் ஸ்டாண்டைப் பார்த்து தமிழ்நாடே புகழ்ந்து பேசிக்கொண்டுள்ளது.

இப்படி அமைச்சர் அண்ணன் நேரு அவர்களும், அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களும் இன்றைக்கு திருச்சியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மதுரை அலங்காநல்லூருக்கு அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 2ஆவது ஜல்லிக் கட்டு மைதானம் என்ற பெருமையை இந்த சூரியூர் பெற்றிருக்கின்றது.

இனிமேல், ஜல்லிக்கட்டு போட்டிக்காக நீங்கள் தனியாக கேலரி அமைக்க வேண்டாம். வாடிவாசல் அமைக்க வேண்டாம். பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகமாகச் செய்ய வேண்டாம். அனைத்தையும் அரசே இன்று செய்து உங்கள் கையில் ஒப்படைத்துள்ளது. ஜல்லிக்கட்டுக்கான எல்லா அடிப்படை வசதிகளும் கொண்ட அரங்கமாக இந்த அரங்கம் அமைக்கப் பட்டிருக்கின்றது. பக்கத்தில் இருக்கின்ற புதுக்கோட்டை, அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும், சிவகங்கை, மதுரையில் இருந்தும் காளைகளும், மாடுபிடி வீரர்களும் இங்கே வந்து போட்டியில் கலந்து கொள்கிறார்கள்.

அதனால் திருச்சி மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இந்த மண்டலத்துக்கே பயன்படக்கூடிய வகையில் இந்த மைதானம் அமைக்கப்பட்டு இருக்கின்றது. எனவே, உங்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, நம்முடைய திராவிட மாடல் அரசு இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உங்களுக்கு தருவதற்குத் தயாராக இருக்கின்றார்.

எனவே, அடுத்த ஆண்டு ஜல்லிக்கட்டிலேயும் உங்களை எல்லாம் நேரில் சந்தித்து, உங்களோடு சேர்ந்து ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு நான் காத்துக் கொண்டு இருக்கிறேன்.

**காளை மாடு பரிசு**

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், பொங்கல் பரிசாக காளை மாடு ஒன்றை எனக்கு அளித்து இருக்கின்றார். அதற்கு நானே பெயர் வைக்க வேண்டும் என்றும் தெரிவித்து இருக்கின்றார். அந்த மாட்டிற்கு உங்களுடைய ஞாபகமாக, சூரியூர் என்ற பெயரை வைத்து, இந்த மாட்டை வழங்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அமைச்சர், உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து, நன்றி கூறி விடைபெறுகின் றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார்.

**பங்கேற்றவர்கள்:**

தங்கவேல், தர்மராஜ், நவல்பட்டு சண்முகம், சூரியூர் ஜல்லிக்கட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாகிகள் மீனாட்சி சுந்தரம், ராமையா, சண்முக சுந்தரம், முருகன், உதயகுமார், ராஜா. உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்